# லஞ்ச் டைம் பஞ்ச் 1

மதிய உணவு இடைவேளை மணியடிக்க எங்கள் ‘டிபன் பாக்ஸ்’களை எடுத்துக் கொண்டு வெளியே வந்தோம். கடைசி வகுப்பு கணக்குப் பாடம். புரிந்தோ, புரியாமலோ மிஸ் எழுதிப்போட்டதை அப்படியே ஜெராக்ஸ் மாதிரி எழுதி களைத்துப் போயிருந்த எங்களுக்கு புத்துணர்வு தருவது இந்த மதிய இடைவேளைதானே. அதிலும் சிறப்பு எங்க பள்ளி மைதானத்தின் நடுவில் ஒரு பெரிய ஆலமரம் அதைச் சுற்றி அழகான சுற்றுப்புறச் சுவர். அதற்குப் பெயர் சோம்பேறி மடம். அது என்னவோ தெரியாது அந்த மடத்தின் ஒவ்வொரு மதியமும் சொந்தக்காரர்கள் அந்த வருஷ +2 மாணவர்கள்தான். இந்த வருஷ அதிர்ஷ்டசாலிகள் நாங்கள். 6 வருஷ காத்திருப்புக்குப் பிறகு கிடைத்த வாய்ப்பு. சந்தோஷமாக நடை போட்டோம் அந்த ஆலமரம் நோக்கி.



பெயர்தான் அதற்கு சோம்பேறி மடம். ஆனால் நாங்கள் சுறு சுறுப்பாக இருக்கும் இடம் அது. ஜாலியாகப் பேசுவோம், சில நேரம் அந்த வழியாகப் போகிற அப்பாவிகளை கலாய்ப்போம். சில நேரம் உருப்படியாக அதாவது பரீட்சை நெருங்கும் போது படிப்பைப்பற்றி பேசுவோம். சில நேரம் ஞானிகள் மாதிரி தத்துவம் பேசுவோம். எங்க குழு தனி குழு தான். குமார், ராஜா, சுருளி, முரளி, நான் என்ற ஐந்து பேர். கொஞ்சம் தத்துவம் அதிகமாக நான் பேசுவதால் என்னை சாமி-ன்னு கூப்பிடுவாங்க. இண்ணைக்கு என்ன கதை அடிக்கப் போறோம்னு தெரியல. அங்க போனாத்தான் தெரியும்.

“ஹலோ குமார் என்னடா சாப்பாடு இண்ணைக்கு?”

“ராஜா டிபன் பாக்ஸை இன்னும் திறக்கல அதுக்குள்ள என்ன சாப்பாடுன்னு அலையாதடா.”

“என்னோட டிபன் பாக்ஸில் அநேகமாக அணுகுண்டு இட்லிதான்னு நினைக்கிறேன். “

“ஏய் சுருளி பாத்து திறடா வெடிக்கப்போகுது”.

“என்னடா முரளி இண்ணைக்கு உம்முண்ணு இருக்க. வாய திறடா”.

“சும்மா தாண்டா சாமி”.

“சாமி இவன் மூஞ்ச பார்த்தா சும்மா மாதிரி இல்ல அம்மா கிட்ட அநேகமாக வாங்கி கட்டியிருப்பான் போல... சரிதானே சுருளி”.

“சுருளி சும்மா இரு நானே வெறுத்துப் போயிருக்கேன்”.



“இந்த வயசிலேயா? சுருளி” போடா இந்த வயசு கஷ்டம் உனக்கு எங்கடா தெரியப் போகுது?”

“ஏண்டா உன் வயசுக்கும் ... கோபத்துக்கும் என்னடா சம்பந்தம்? நானும் உன் வயசுதாண்டா. அப்புறம் என்னடா தங்கச்சி கிட்ட பேனா கேட்டாக்க, இது எங்க ஏரியா உள்ள வராதண்ணு தள்ளுறா...அண்ணன் கிட்ட போனா, வெளிய போடா உனக்கு வயசு பத்தலண்ணு சொல்றான். உண்மையிலேயே நாம யாருடா?”

“ஆம்மாண்டா நம்ம யாரு... அம்மா ஏண்டா சின்னப்பிள்ளை கிட்ட வம்பு பண்றேங்கறாங்க. அப்பா பெரிய பையன் கிட்ட அடங்கியிருடாங்கிறாங்க... பெரிய **இன்சல்ட் டா**”.

“ரொம்ப குழம்பிப் போயிருக்கிறீங்க... நான் கிளியர் பண்றேன். நாமதாண்டா **கிரேட் டீன் ஏஜ் டீன் ஏஜேர்ஸ்** ... காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான் சுருளி”.

“போதும் நிறுத்துடா சுருளி. யாருமே ஏற்றுக் கொள்ளாத இந்த வயசு **கிரேட் டீன் ஏஜூம், நம் டீன் ஏஜ்**”.

இவர்கள் பேசிக் கொண்டிருந்ததை கவனமாக கேட்டுக் கொண்டிருந்த எனக்கு பேசணும் போல இருந்தது. மெதுவாக பேச்சை ஆரம்பித்தேன்.

“யாருடா சொன்னது யாருமே ஏத்துக்காத வயதில் வாழுகிறோம் என்று.”

“அடே வாடா சாமி... என்னடா வாய திறக்கலன்னு பார்த்தேன்... சரி சரி சொல்லு யாருடா ஏத்துக்கிறாங்க...”அவன் பேச்சில் நக்கல் கலந்து இருந்தது.

“பிரண்ட்ஸ், யாருமே நம்மை ஏத்துக்கிற மாதிரி தெரியாட்டியும், இந்த வயதுக்காக எல்லாரும் ஏங்குறாங்க என்பதுதான் உண்மை.”

“அது எப்படிடா” வாயைப்பிளந்து வேடிக்கை காட்டினான் குமார்.

“நீ வேணும்னா மெதுவா பக்கத்துல இருக்கிற பெரியவங்கள பாரு நம்மளேயே ஓரக்கண்ணால் பார்க்கும் போது அவங்க கண்ணுல அவங்க சின்ன வயது ஞாபகம் ஃபிளாஷ் பேக் மாதிரி தெரியும். அவங்க கண்ணுல கொஞ்சம் பொறாமையும் தெரியும்...உள்ளுக்குள்ள பெரு மூச்சு விடுவாங்க தெரியுமா?”

“ஆனால் அவங்க நம்மள பார்க்கும் போதெல்லாம் அந்த காலத்துல எல்லாம் நாங்க எப்படி இருந்தோம் இவனுங்களப் பாருன்னு ஏன் சொல்றாங்க?” குமார் ஆத்திரத்தில் கட்டை விரலை உயர்த்தி பேசினான்.

சுருளி ஆவேசமாக பேசினான் “ஆமாண்டா நேத்து அப்பா பிரண்ட்டு ஒருத்தர் வந்தார். நான் பேசாம வீடியோ கேம் விளையாடிக் கொண்டு இருந்தேன்... அவர் போன பிறகு, நாங்க சின்ன வயசில

பெரியவங்க வீட்டுக்கு வந்தா எப்படி இருப்போம்ன்னு ஆரம்பிச்சவரு சும்மா அரிஞ்சி கொட்டிட்டாருல்ல.....”

“சுருளி அதுக்குக் காரணம் அந்த வயதில் அவர்கள் செய்த செய்கைக்கும் இந்த வயதில் நமது செய்கைக்கும் இடையிலுள்ள வளர்ச்சிதாண்டா அது.....”

“அடேங்கப்பா சாமி... அது என்னடா மரம் வளர்ர மாதிரி வளர்ச்சி?”

“நான் சொல்றத கேளுங்க முன்னால யாராவது பெரியவங்க வந்தா வரவேற்றுவிட்டு பெற்றோரை கூப்பிட்டு சொல்வார்கள். அதற்கு பிறகு வெளியே போவார்கள் அல்லது தங்கள் வேலையைச் செய்வார்கள். ஆனால் இப்ப கம்ப்யூட்டர் கேம் அல்லது வீடியோ கேம் போன்றவற்றில் மூழ்கி இருக்கும் போது யாராவது வந்தா கண் தெரியாதவர்கள் போல விளையாடிக் கொண்டிருப்பது, இல்லை டி.வி. பார்க்க முடியாம போகுதே என்ற எரிச்சலில் உம் என்று இருப்பது பெரியவர்களுக்கு வித்தியாசமாகத்தானே தெரியும். அப்பா எங்கே என்று கேட்டா இருக்கிறார்ண்ணு ஒத்த வார்த்தை பதில், வந்தவர்களை **இன்சல்ட்** பண்ற மாதிரிதானே இருக்கும். யாராவது வீட்டுக்கு வந்தா சின்ன சிரிப்பு சிரித்து வண்டியை வேகமாக ஸ்டார்ட் செய்து போவது மோசமான வளர்ச்சிதானே. வந்தவர் பெரிய அதிகாரியோ அல்லது குடும்பத்தில் முக்கிய பெரியவர்களானால் பெற்றவர்களுக்கு தர்ம சங்கடம் தானே! கொஞ்சம் யோசிங் கடா...”



“போடா சாமி ... இந்த வணக்கம் எல்லாம் வாயில வரமாட்டேங்குதே...”

“நான் நேத்து எங்க வீட்டுக்கு வந்தவரை, **ஹாய் அங்கிள் எப்படி இருக்கிறீங்க... உள்ள வாங்க, அங்கிள். அப்பா உங்களைப் பார்க்க அங்கிள் வந்திருக்கிறாங்க–ண்ணு சொல்லிட்டு** “அங்கிள் எனக்கு வெளியில கொஞ்சம் வேலையிருக்கு போயிட்டு வாறேன்”னு சொன்னேன். அதுக்கு அந்த பெரியவர் என் அப்பாகிட்ட என்ன சொன்னாரு தெரியுமா, “உன் பிள்ளையை நல்லா வளர்த்திருக்கிறேயே”ன்னு பாராட்டியிருக்காரு. இந்த விஷயத்தில் மட்டுமல்ல நிறைய செயல்களில் வளர்ச்சியுண்டு. ஆனால் அது மரியாதையை உருவாக்கும் வளர்ச்சியாக இருக்கணும். சரிதான் மரியாதையான வளர்ச்சியை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளத்தான் செய்வார்கள் சாமி..” குமாரின் இந்த சொற்கள் என் கருத்தை ஏற்பது போல ஆமோதித்தது.

“எப்படிடா உனக்கு மட்டும் இவ்வளவு தத்துவம் தெரியுது? தாங்க முடியலடா...”

“பைபிளில் கூட யோசேப்பு என்கிற வாலிபன் தன் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தான். தவறுகள் செய்த தன் வயதுக்கு மூத்த தன் சகோதரர்களுடன் ஒத்து வாழாது, அவர்களைத் திருத்த முயன்ற அவனை, அவன் சகோதரர்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. அவர்கள் பார்வைக்கு யோசேப்பு மோசமானவனாகத்தான் தெரிந்தான்.

ஆனாலும் தனது பரிசுத்தத்தை விடவில்லை யோசேப்பு. பொறாமை கொண்ட சகோதரர்களே அவனை எகிப்திய வியாபாரிகளுக்கு விற்றுப் போட்டனர். அங்கும் பரிசுத்தமாக வாழ்ந்ததால் துன்பங்கள் வந்தாலும் ... கடவுள் அவனை எகிப்தில் பெரிய அதிகாரியாக மாற்றினார்."

"ஏண்டா இப்படி இருந்தா சாமியார்ன்னு சொல்ல மாட்டாங்களா..." நண்பன் ராஜாவின் முகத்தில் கவலை இருந்தது. "ஆனால் நாம் பரிசுத்தமான வாழ்க்கை வாழும் போது, நம்ம வயதில் உள்ளவர்கள் நம்மை நண்பர்களாக சேர்த்துக் கொள்ள தயக்கம் காட்டுவார்கள். ஆனால் வித்தியாசமான வாழ்க்கை வாழ விரும்பும் வாலிபர்கள் தான் சாதனை படைத்திருக்கிறார்கள். சாதனை படைக்கும் நபரை சேர்த்துக் கொள்ள யாருமே தயங்குவதில்லையே... ஏன் நீங்க என்னை உங்க நண்பனாக வைத்துக் கொள்ளலியா..."

"சரிதான் சாமி நம்ம ஒழுங்கா இருந்தா மத்தவங்க நம்மள ஏத்துக்கத்தான் செய்வாங்க..." குமாரின் வார்த்தையில் மாற்றம் இருந்தது.

"ம்... என்னவோ சொல்ற கொஞ்சம் புரியுது... புரியாதமாதிரியும் இருக்கு...சரி சிந்திப்போம்..." சுருளி கையை சுழற்றி ஸ்டைல் காட்டினான்.

டிங்... டிங்... டிங்...

பள்ளி மணியடிக்க டிபன் பாக்ஸை மூடி வைத்துவிட்டு கைகழுவ ஓடினோம்...

காத்திருப்போம் அடுத்த லஞ்ச் டைம்க்கு...



- மேபல் டேனி

